# நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் பகுதி – 1


# (THE MYSTERY OF THE FOUR KINGDOMS) PART – I

## (24 MAY – 2015)



போதகர் : A. சாமுவேல்

கல்வாரி கூடாரம், சென்னை - 600 087.


உலகத்தின் ராஜ்யங்களும் கிறிஸ்துவின் ராஜ்யமும்
தானியேல் 2:31-45
பாபிலோனிய ராஜ்யம்
தலை - பொன்
நேபுகாத்நேச்சர்
( 605 BC - 539 BC )
சிங்கம்
மேதிய பெர்சிய ராஜ்யம்
மார்பு - வெள்ளி
தரியு ராஜா
( 539 BC - 331 BC )
கரடி
கிரேக்க ராஜ்யம்
வயிறு - வெண்கலம்
மகா அலெக்ஸாண்டர்
( 331BC - 146 BC )
சிவிங்கி
ரோம ராஜ்யம்
கால்கள் - இரும்பு
நீரோ மன்னன்
( 146 BC - 1453 AD )
பயங்கரமான மிருகம்
பிரிக்கப்பட்ட ராஜ்யம்
பாதங்கள் - இரும்பும் களிமண்ணும்
கத்தோலிக் பிராட்டஸ்டன்ட்
போப்புவின் ரோமாபுரி
( 1453 AD - CHRIST KINGDOM )
கையால்
பெயர்க்கப்படாத கல்
- நியாயத்தீர்ப்பு
கல் - பூமியெல்லாம் நிரப்பிற்று
கிறிஸ்துவின் ராஜ்யம்

# *The Mystery of the four Kingdoms* - *Part - I*

## நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் – பகுதி – *I*

**பரிசுத்த மத்தேயு எழுதின சுவிசேஷம் 24- ஆம் அதிகாரம் 15 ஆம் வசனம்.**

**15. மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்.**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தானியேல் தீர்க்கதரிசியைப் பற்றிச் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 600 வருஷங்களுக்கு முன்பாக இந்த தானியேல் தீர்க்கதரிசி ஜீவித்தான். அவனுடைய காரியத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து இங்கே சொல்லுகிறார்.

தானியேல் ஒரு தீர்க்கதரிசி என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். தானியேல் ஒரு சரித்திரக்காரன் (Historian) அல்ல. தானியேல் ஒரு அரசியல்வாதி (Politician) அல்ல. தானியேல் ஒரு தீர்க்கதரிசி. (Daniel was a Prophet). தானியேலின் தீர்க்கதரிசனங்களை வாசிக்கும்போது சிந்திக்கக்கடவன் என்று இங்கே சொல்லியிருக்கிறார். இதோ அவனுடைய தீர்க்கதரிசன வசனங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஞாபகப்படுத்துகிறார். அந்தத் தீர்க்கதரிசனத்தைக் குறித்த ஆவிக்குரிய வெளிப்பாடு நமக்குத் தேவை. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன் என்று இயேசு சொல்லுகிறார். அதனால் தான் இன்றைக்குத் தானியேல் தீர்க்கதரிசியைக் குறித்துப் பேசுகிறேன்.

நான்கு ராஜ்ஜியங்களைக் குறித்ததான இரகசியம் முதலாம் பாகத்தை இப்பொழுது நாம் தியானிக்கப் போகிறோம். (The Mystery of The Four Kingdoms – Part – I). தானியேல், நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் சொன்னான்.

தானியேல் விளக்கம் கொடுத்ததான அந்தச் சிலையைப் பார்க்கிறான். தலை பொன்னாக இருக்கிறது. அதனுடைய மார்பும் புயங்களும் வெள்ளியாக இருக்கிறது. வயிறு வெண்கலமாய் இருக்கிறது, இரண்டு கால்களும் இரும்பாக இருக்கிறது. அதனுடைய பாதங்களிலே பத்து விரல்கள் இருக்கிறது. அவை இரும்பும் களிமண்ணுமாய் இருக்கிறது..

கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் வந்து அந்தச் சிலையை மோதும் பொழுது அந்தச் சிலையானது தூள், தூளாக மாறினது. காற்றில் பறந்து, இல்லாமலேயே போயிற்று. ஆனால் அந்தக் கல்லோ பூமி எல்லாவற்றையும் நிரப்பிவிட்டது.

தலை பாபிலோன் ராஜ்ஜியமாயிருக்கிறது, அதனுடைய மார்பும் புயங்களும் மேதிய, பெர்சிய ராஜ்யமாய் இருக்கிறது. வயிறு வெண்கலம் அது கிரேக்க ராஜ்யமாய் இருக்கிறது. அதன் இரண்டு கால்கள் இரும்பு. ரோம ராஜ்ஜியமாய் இருக்கிறது. இன்றைக்கு நாம் பாதத்தின் நாட்களில் இருக்கிறோம். பாதி இரும்பு பாதி களிமண். இப்போது கல் உருண்டு வந்து மோதும் பொழுது அந்தச் சிலையானது நொறுங்கிப்போகிறது.

பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, களிமண் எல்லாமே நொறுங்கி காற்றோடு காற்றாகக் கலந்து, காற்று அதைக் கொண்டு போனது. நினைவில் அது வரப்போகிறதில்லை. மறுபடியும் அது காட்சியில் தோன்றப்போவதில்லை. இந்தக்கல்லோ பெரிய பர்வதமாகி பூமியை நிரப்பி விட்டது. அல்லேலூயா! அந்தக் கல் தேவனுடைய ராஜ்ஜியமாயிருக்கிறது.

நாம் தேவனுடைய ராஜ்ஜியம் வரக் காத்திருக்கிறோம். எத்தனைப் பேர் காத்திருக்கிறோம்? இப்பொழுது இரும்பும் களிமண்ணுமான காலத்தில் இருக்கிறோம். ஒரு கட்சி பலமாக இருக்கிறது இன்னொரு கட்சி பலவீனமாக இருக்கிறது. அரசியல் தேவனுடைய அனுமதிக்கும் சித்தம். தேவனுடைய பரிபூரண சித்தமல்ல. ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட காலம் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு நாட்டில் தேர்தல் வைக்கும் போது பலமான கட்சி, பலவீனமான கட்சியை ஜெயிக்கிறது. இரும்பும் களிமண்ணும் இருக்கிறது. ஒன்றோடு ஒன்று ஒட்டாது. இது எல்லாமே அழிந்து போகவேண்டிய நேரத்தில் பாதத்தின் நாட்களிலே இருக்கிறோம்.

மனுஷனுடைய ராஜ்ஜியமானது தலையிலிருந்து காலில் போகிறது. ஆனால் தேவனுடைய ராஜ்ஜியமானது காலிலிருந்து தலைக்குப் போகிறது. என்றைக்கும் அது நிலைத்திருக்கும். மனுஷனுடைய ராஜ்ஜியம் அழிந்து போகும். நாம் அவ்விதமான நேரத்தில் இருக்கிறோம்.

கிறிஸ்தவர்கள் அரசியலில் தலையிடலாமா? மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் அரசியலில் தலையிட மாட்டார்கள். அது தேவனுடைய அனுமதிக்கும் சித்தம் அதற்கு முடிவு உண்டு. நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவர்கள் அல்லேலூயா.

உலகத்தின் ராஜ்ஜியங்களுக்குப் பின்னாலே ஒரு ஆவி இருக்கிறது. ஒவ்வொரு ராஜ்ஜியமும் ஒரு ஆவியாக இருக்கிறது. கிரேக்க தேசத்து அதிபதி வந்து என்னைத் தடைபண்ணினான் என்று ஒரு தூதன் சொல்லுகிறான். அசீரிய ராஜ்ஜியம், பாபிலோனிய ராஜ்ஜியம், மேதிய பெர்சிய ராஜ்ஜியம், கிரேக்க ராஜ்ஜியம் எல்லாவற்றுக்கும் பின்னால் ஒரு ஆவி இருக்கிறது. அது ஒன்றை மற்றொன்று மேற்கொண்டு அழித்துப்போடுகிறது.

அதைத்தான் நாம் தானியேல் தீர்க்கதரிசி புத்தகத்தில் வாசிக்கிறோம். யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் இன்னும் அதைக் குறித்து அதிக விளக்கமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறான். நம்முடைய வாழ்க்கையில் அது நிறைவேறுவதை நாம் காண்கிறோம். அது அதிகமான வரலாற்றை உடையதாய் இருக்கிறது. தீர்க்கதரிசனம் நிறைவேறுதல் சரித்திரத்திற்குச் சம்பந்தப்பட்டது. ஆவிக்குரிய வெளிப்பாடும் இருக்கிறது. ஆகையால் நீங்கள் மனதில் நன்றாகப் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

கடைசியாக, தேவனுடைய ராஜ்ஜியமானது (Everlasting Kingdom) ஸ்தாபிக்கப்படுகிறது. தானியேல் யார்? தானியேல் ராஜ குலத்தைச் சேர்ந்தவன், யூத குலத்தைச் சேர்ந்தவன். கி.மு. 605-ல் தானியேல் பதினைந்து வயதாய் இருக்கும் போது நேபுகாத்நேச்சார் எருசலேமின் மேல் படையெடுத்து வந்து தானியேலையும் அவன் நண்பர்கள் இன்னும் அனேகரையும் சிறைகைதிகளாய் பாபிலோனுக்குக் கொண்டு சென்றான். (Daniel then a teen ager was deported to Babylon, the capital city of the kingdom of Babylonia). நேபுகார்நேச்சார் தேவாலயத்தில் இருந்த பொற்பாத்திரங்களை எல்லாம் எடுத்துக் கொண்டுபோய்விட்டான். இதோ தேவனுடைய ஆலயமானது இடிக்கப்பட்டது.

பாபிலோனில் தானியேல் இருக்கும்பொழுது தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது என்று கர்த்தருக்குப் பொருத்தனை செய்தான் ஆமென்! தேவனுக்கென்று உண்மையான தீர்க்கதரிசியாக இருந்தான். அவன் விசுவாசத்தை இழந்து போகவில்லை. அவன் கர்த்தருக்கென்று உண்மையாய் இருந்தான். எவ்விதத்திலும் அந்த பாபிலோனின் காரியத்தில் இணைந்து போகவில்லை.

இன்று நாம் உலகத்தில் இருக்கிறோம். ஆனால், உலகத்தின் காரியத்தில் இணைந்து போவதில்லை. தொலைக்காட்சி (T.V.) வைப்பதில்லை. யாராகிலும் தொலைக்காட்சி வைத்திருந்தால் நீங்கள் உலகத்தோடு இணைந்து போகிறீர்கள், பாவத்தோடு இணைந்து

போகிறீர்கள், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. உங்களுடைய வாழ்க்கை மாய்மாலமான வாழ்க்கையாய் இருக்கும்.

நாம் உலகத்தின் காரியத்தில் இணைந்து போவதில்லை. கணினியில் (Computer) தேவையில்லாத காரியங்கள் நாம் பார்ப்பதில்லை. அதில் சகல விதமான அசுத்தங்களும் இருக்கிறது, இன்டர்நெட்டில் (Internet) எல்லாவிதமான காரியங்களும் இருக்கிறது, அப்படி நாம் அதைக்காண்போமென்றால் நாம் தானியேல் கிடையாது. பாபிலோனில் எவ்வளவோ பாவங்கள் இருந்தது, உலக சிற்றின்பங்கள் இருந்தது. அதோடு கூட அவன் இணைந்து போகாதபடி கர்த்தருடைய வார்த்தைக்காக நின்றான். சிங்கக்கெபியில் போட்டாலும் ஜெபம் பண்ணுவதை நிறுத்தவில்லை. அல்லேலுயா! இவ்விதமாக தேவனுக்கென்று உத்தமமாய் ஜீவித்தான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது.

இந்தக் கடைசி காலத்தில் நாம் பாபிலோனில் இருக்கிறோம். பாபிலோன் என்றால் குழப்பம் என்று அர்த்தம். (Babylon means confusion). இந்த உலகம் இன்று குழப்பத்தின் உலகமாய் இருக்கிறது. எல்லோரும் மூளை குழம்பிப்போய் இருக்கிறார்கள். காலையிலிருந்து சாயங்காலம் வரை இதைத்தெரிந்து கொள்ளலாமா? தெரிந்து கொள்ளக் கூடாதா? எப்போதும் தெரிந்து கொள்வது தான். எந்தக் காலத்திலாகிலும் இவ்விதமாய் இருந்ததா? இதைச் செய்யலாமா? செய்யக்கூடாதா? இங்கே போகலாமா? போகக்கூடாதா? படிக்கலாமா? படிக்கக்கூடாதா?

காலையில் சபைக்கு வரலாமா? வரக்கூடாதா? எல்லாமே இப்பொழுது தெரிந்து கொள்கின்ற காலத்தில் இருக்கிறோம். படிக்கின்ற பிள்ளைகளுக்கு என்ன பாடத்தை எடுக்கிறது. +2 முடித்தால் அதற்குப் பின்பு என்ன பாடம் தேர்ந்தெடுப்பது? மூளையே குழம்பிப்போகும். பெற்றோருக்கும் குழம்பிப்போகும்.

இவ்விதமான காலத்தில் இருக்கிறோம். இந்த சத்தியத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கலாமா? அல்லது இப்படியே ஜீவிக்கலாமா? உங்களுக்குக் குழப்பம் வரும். இவ்விதமான பாபிலோனில் நாம் இருக்கிறோம். அவ்விதமாய் பாபிலோனில் இருக்கும்போது தானியேல் தன் விசுவாசத்தை இழந்து போகவில்லை. எந்த விதத்திலும் உலகத்தின் காரியங்களோடு தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளவில்லை.

**தானியேல் 1:8**

**தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவன் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.**

எத்தனைப் பேர் அவ்விதமாய்த் தீர்மானம் பண்ணியிருக்கிறோம்? அப்படியானால் இந்தக் கடைசி காலத்திலே நீங்கள் தானியேலாய் இருக்கிறீர்கள். (You are also a Daniel in the end time). ஆமென். தானியேல், கிறிஸ்து பிறப்பதற்கு 600 வருஷத்துக்கு முன்பாக பாபிலோனிலே ஜீவித்தான். நாம் கிறிஸ்து பிறந்து இன்று 2015- ம் வருடத்தில் ஜீவிக்கிறோம். தானியேலுக்குள் இருந்த அந்த ஆவி நமக்குள் இருக்கிறது. (We are the Daniel in the end time).

தானியேல் புஸ்தகத்தில் முதல் ஆறு அதிகாரத்தில் நாம் என்ன வாசிக்கிறோம் என்றால் தானியேல் வாழ்க்கையில் நடந்த முக்கியமான சம்பவங்களை நாம் வாசிக்கின்றோம். ஏழாம் அதிகாரத்திலிருந்து பன்னிரண்டாம் அதிகாரம் வரை தானியேல் கண்ட சொப்பனங்கள், தரிசனங்கள் குறித்து வாசிக்கிறோம். (It contains prophetic vision during Daniel’s life). நான்கு மிருகங்களைக் குறித்தும், மனுஷகுமாரனுடைய வருகையைக் குறித்தும், ஆட்டுக்கடாவைக்

குறித்தும், வெள்ளாட்டுக்கடாவைக் குறித்தும் இவ்விதமான தரிசனங்களைக் குறித்து வாசிக்கின்றோம்.

இப்பொழுது தானியேல் கண்ட அந்தச்சிலை : இரண்டாம் அதிகாரம் இரண்டு முதல் மூன்று வசனங்களை வாசிக்கும்போது நேபுகாத்நேச்சார் ஒரு நாள் இராத்திரியிலே சொப்பனத்தைக் காண்கிறான். அவன் தான் பாபிலோனின் ராஜா. வருங்காலத்தில் உலகம் எப்படி இருக்கப்போகிறதோ, நம்முடைய ராஜ்ஜியம் எவ்விதமாய் இருக்கப் போகிறதோ என்ற நினைப்பில் அவன் படுக்கும் பொழுது அவனுக்குச் சொப்பனம் வருகிறது. சொப்பனத்தையும் அவன் மறந்து விட்டான். அதற்கு அர்த்தமும் அவனுக்குத் தெரியாது. அதனால் ஞானிகள் குறிசொல்லுகிறவர்கள், சாஸ்திரிகள் எல்லாரையும் அழைத்து நான் நேற்று இராத்திரியிலே ஒரு சொப்பனம் கண்டேன். நீங்கள் சொப்பனத்தையும் சொல்ல வேண்டும் அதின் அர்த்தத்தையும் சொல்ல வேண்டும் என்றான்.

அப்பொழுது அந்த ஞானிகள், சாஸ்திரிகள், குறிசொல்லுகிறவர்கள் சொப்பனத்தைச் சொல்லும் நாங்கள் அர்த்தத்தைச் சொல்லுகிறோம் என்றனர்.

அப்பொழுது ராஜா, நீங்கள் எதையாவது கதையைப் புரட்டப் பார்க்கிறீர்கள். நான் சொப்பனத்தைச் சொன்னால் ஏதாகிலும் அர்த்தத்தைச் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். உண்மையாகவே அர்த்தத்தை உங்களுக்குச் சொல்லத் தெரியுமானால் சொப்பனத்தையம் சொல்லத் தெரியும் என்றான். உடனே அவர்கள் மனுஷரோடு வாழாத கடவுள் தான் அதைச் சொல்ல முடியும்; எங்கள் கடவுள் அதெல்லாம் வெளிப்படுத்த முடியாது என்றனர்.

கல்லும், மண்ணுமான விக்கிரகங்கள், பலவிதமான மோசமான வரலாற்றை உடையதான தெய்வங்களெல்லாம் அதை வெளிப்படுத்த முடியாது. மனுஷர்களோடு சஞ்சரிக்காத அந்த உன்னதங்களில் வாசம் பண்ணுகிற கர்த்தர்தான் இதை வெளிப்படுத்த முடியும். அவர்களே சரியாகச் சொல்லிவிட்டார்கள் அவர்தான் நாம் ஆராதிக்கிற தேவன் அவர்தான் தானியேலின் தேவன்.

தானியேல் ராஜாவிடம் போய் கால அவகாசம் கேட்கிறான். தானியேலும் அவன் தோழர்களும் ஜெபிக்கும் போது கர்த்தர் சொப்பனத்தைக் காண்பிக்கிறார். ராஜா கண்ட சொப்பனத்தை அவன் தரிசனத்தில் காண்கிறான். அதனுடைய வியாக்கியானமும் கொடுக்கப்படுகிறது. தானியேல் இப்பொழுது ராஜாவிடம் போய் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் சொல்லுகிறான்.

அப்பொழுது தானியேலுக்குத் தூபம் காட்டவும், காணிக்கை செலுத்தவும் கட்டளையிட்டான். அவன் கடவுள் தான், கடவுளின் அவதாரம் என்று நினைத்துவிட்டான். தானியேலை உயர்ந்த ஸ்தானத்திற்குக் கொண்டு வந்தான். இதோ தானியேலின் தேவனாகிய கர்த்தர்தான் உலகத்திலே உண்மையான கர்த்தர். அவரே ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாய் இருக்கிறார். கர்த்தாதி கர்த்தராய் இருக்கிறார். அவருடைய ராஜ்ஜியம் சதாகாலங்களிலும் உள்ள ராஜ்ஜியம் அவரே மறைபொருளை வெளிப்படுத்துகிறவர் என்று அவன் அறிக்கை விட்டான்.

தானியேல் இப்பொழுது, தேவனால் உறுதியாக்கப்பட்ட தீர்க்கதரிசி (He was a Vindicated prophet) என்று பெயர் பெற்றான். எத்தனையோ தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். தேவன் தீர்க்கதரிசியை உறுதிப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு அநேக பெந்தேகோஸ்தே சபைகளில் தீர்க்கதரிசனங்கள் உரைக்கிறார்கள் ஆனால் அற்புதத்தினாலும் அடையாளத்தினாலும் உறுதிப்படுத்த ஒரு தீர்க்கதரிசியும் இல்லை. ஆனால் இந்தக் கடைசி காலத்திலே சகோ. பிரன்ஹாமை (Bro. Branham) ஆண்டவர்

அனுப்பியிருக்கிறார். அவர் தேவனால் உறுதியாக்கப்பட்ட தீர்க்கதரிசி. (He was a vindicated Prophet) அல்லேலூயா! லட்சக்கணக்கான தீர்க்கதரிசனங்களில் ஒன்று கூட தவறிப்போனதில்லை. லட்சக்கணக்கான அற்புதங்களில் ஒன்றுமே தவறு கிடையாது. இதோ மேகஸ்தம்பத்தினாலும், அக்கினி ஸ்தம்பத்தினாலும் உறுதியாக்கப்பட்ட தீர்க்கதரிசி.

எத்தனையோ தீர்க்கதரிகள் உலகத்தில் இருக்கிறார்கள்; யூகித்துச் சொல்லுவார்கள். பாதி தவறாய் இருக்கலாம். பாதி சரியாக இருக்கலாம். ஆனால் தானியேல் தேவனால் உறுதியாக்கப்பட்ட தீர்க்கதரிசி. நேபுகாத்நேச்சார் சொப்பனம் கண்டதை இவனே சொப்பனம் காண்கிறான். (Daniel was a Vindicated Prophet before the king Nebuchadnezzar who not only interpret the dream but also dreamed the dream) இவ்விதமான ஒரு தீர்க்கதரிசியைக் கர்த்தர் அனுப்பியிருக்கிறார்.

தானியேல் கண்ட அந்தச் சிலையிலே நான்கு பகுதிகள் இருக்கிறது.

**தானியேல் 2 : 31 - 33**

31. *ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக்கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாச முள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது.*

நேபுகாத்நேச்சார் பார்க்கும் பொழுது பெரிய சிலை வந்து அவன் முன்னால் நிற்கிறது. அது பிரகாசமாய் இருக்கிறது.

32. *அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,*
33. *அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது*

இவ்விதமான ஒரு சொப்பனத்தை நீர் கண்டீர் என்று சொல்லுகிறான்.

அதன் பின்பு, தானியேல் எல்லாவற்றுக்கும் விளக்கம் கொடுக்கிறான். இருந்தாலும் அவனுடைய காலத்தில் பரிபூரணமாய் வெளிப்படவில்லை. இந்தக் கடைசி காலத்தில் தான் வெளிப்பட்டிருக்கிறது.

தானியேல் ஏழாம் அதிகாரத்திலே முதல் ஏழு வசனங்களை வாசிக்கும் பொழுது,

தானியேல் ஒரு சொப்பனமும் தரிசனமும் காண்கிறான். அங்கே நான்கு மிருகங்களைப் பார்க்கிறான். முதலாவது சிங்கம். அதற்கு கழுகின் செட்டைகள் இருக்கிறது. இரண்டாவது மிருகம் கரடி. அதில் வாயில் மூன்று விலா எலும்புகளைக் கவ்விக்கொண்டு இருக்கிறது. அது ஒரு பக்கமாகச் சாய்ந்து நிற்கிறது. மூன்றாம் மிருகம் சிவிங்கி. அதற்கு நான்கு இறக்கைகள் இருக்கிறது. அதற்கு நான்கு தலைகளும் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு ஒரு பயங்கரமான மிருகம். அதைப் பார்க்கும் போது அவனால் அதற்கு விளக்கம் சொல்ல முடியவில்லை. அதற்குப் பத்து கொம்புகள் இருந்தது என்று சொல்லப்பட்டது. இந்த நான்கு மிருகங்களும் இந்தச் சிலையோடு சம்பந்தப்பட்டுள்ளது.

நான்கு ராஜ்ஜியங்களுடைய இரகசியம் என்ன என்பதை நாம் தியானிக்கப் போகிறோம். தானியேலுக்கு எல்லாம் வெளிப்பட்டாலும், நான்காவது மிருகத்தைக் குறித்து அவனுக்கு நன்றாகப் புரியவில்லை. இதனால் அவன் கர்த்தரிடத்தில் கேட்கும்போது நீ அதைப் புதைபொருளாக வை கடைசி காலத்திலே வெளிப்படும் என்று சொல்லிவிட்டார்.

<u>தானியேல் 12: 4</u>

**4. தானியேலாகிய நீயோவென்றால் முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து, வைத்து இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள் அறிவும் பெருகிப்போம் என்றான்.**

தானியேலே, நீ இந்த புஸ்தகத்தை மூடி இதை முத்திரை போடு. கடைசி காலம் வரைக்கும் அது புதைபொருளாக இருக்கும் (Shut up and Seal the book even till the end). கடைசி காலத்திலே அது வெளிப்படுத்தப்படும்.

அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். இப்பொழுது ஜனங்கள் அதிக பிரயாணம் செய்கிறார்கள். அமெரிக்காவுக்குப் போகிறார்கள்; வருகிறார்கள். உலகத்தின் பல நாடுகளுக்கு விமானத்தில் போகிறார்கள்; வருகிறார்கள்; தொடர்வண்டியில், இருசக்கர, நான்கு சக்கர வாகனத்தில் (Train, Two and Four Wheeler) போகிறார்கள்.

வேலைக்கு 50 மைல் தூரம் போகிறார்கள்; திரும்பி வீட்டிற்கு வருகிறார்கள். இந்த மாதிரி போக்குவரத்து காலம் உலகத்தில் இதுவரைக்கும் இருந்ததில்லை. இப்படியாக எத்தனையோ கிலோமீட்டர் தூரம் ஒவ்வொருவரும்; ஒவ்வொரு நாளும் பிரயாணம் செய்கிறார்கள். எனவே அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள் அறிவு பெருகிப்போகும்.

இப்பொழுது தகவல் தொடர்பு காலத்தில் (Information age) வந்திருக்கிறோம். இன்டர்நெட்டில் எந்த காரியத்தையும் நீங்கள் தேடினாலும் உங்களுக்கு அதில் அதிக செய்தி இருக்கிறது. அதனால் இப்பொழுது தகவல் தொடர்பு அதிகமாக மாறியிருக்கிறது.

உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் உடனே தெரிந்துவிடும். இவ்விதமான காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். படிப்பு இப்பொழுது அதிகம். தகவல் தொடர்பு அதிகம். இவ்விதமான கடைசி காலம் வரும்பொழுது அது வெளிப்படும்.

தானியேலே, உனக்கு அது பற்றி முழுவதும் வெளிப்படுத்த முடியாது. இது வெளிப்படுத்தப்பட காலமல்ல. இப்பொழுது அதை வெளிப்படுத்தினால் சாத்தான் அதைக் கெடுத்து விடுவான். அதனால் நீ அடையாளமாய் முத்திரைபோடு. எப்படி முத்திரை போடவேண்டும்? நான்கு மிருகங்கள், அந்தச் சிலையில் இருக்கும் நான்கு உலோகங்களாக. முத்திரை போட்டு விடு. அது கடைசி காலத்தில் வெளிப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சகோதரன். பிரன்ஹாம் (Bro. Branham) ஏழாம் முத்திரையைப் பேசும்போது இப்பொழுது நான் அதை வெளிப்படையாகச் சொல்ல மனதில்லை. நான் அதைச் சொன்னால் சாத்தான் அதற்குப் பலவிதமான, குழப்பமான வியாக்கியானங்களைக் கொடுத்துக் குழப்பிவிடுவான் என்று கூறியுள்ளார். ஆனால் இப்பொழுது மணவாட்டிக்கு ஆண்டவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஏழாம் முத்திரையானது இயேசு கிறிஸ்துவின் வருகையாய் இருக்கிறது (Seventh seal is the Coming of the Lord). ஏழாம் முத்திரையின் இரகசியமானது ஏற்ற வேளையில் வெளிப்படும். இப்பொழுது அதை வெளிப்படுத்த வேண்டிய நேரம் கிடையாது. வெளிப்படுத்தினால் சாத்தான் கெடுத்து விடுவான். இரகசியத்தைச் சொன்னால் அதைவேறு மாதிரி, திரித்துச் சொல்லிவிடுவான். இரகசியத்தை எல்லாரிடமும் சொல்லக்கூடாது. அதனால் மணவாட்டிக்கு அது கடைசி காலத்தில் வெளிப்படும் என்று சொல்லப்பட்டது.

நான் அதைக்கேட்டேன் ஆனாலும் எனக்கு அது புரியவில்லை என்று தானியேல் சொல்லுகிறான்.

தானியேல் 12: 8, 9

8. நான் அதைக் கேட்டும், அதின்பொருளை அறியவில்லை; ஆகையால்: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன்.

9. அதற்கு அவன் தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்.

தானியேலே, நீ போகலாம். நீ இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய அவசியமில்லை. உனக்குத் தரிசனம் (Vision) கொடுத்திருக்கிறேன். சொப்பனம் (Dream) கொடுத்திருக்கிறேன். ஆனாலும் நீ அதைப் புரிந்து கொள்ளமுடியாது. முடிவு காலம் வரும்; அந்தப் பாதத்தின் நாட்கள் வரும்; இரும்பும் களிமண்ணுமான காலம் வரும்; இப்பொழுது அந்தக் காலத்தில் நாம் இருக்கிறோம். அந்த நேரத்தில் ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு தேவரகசியம் வெளிப்படும்.

தானியேல் கண்ட அதே சொப்பனம், அதே தரிசனங்களைத்தான் யோவான் பத்முதீவிலே காண்கிறான் (John had information of the same vision). அங்கே அதை அடையாளச் சின்னமாக முத்திரை போட்டுவிட்டான்.

ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதும்பொழுது தேவரகசியம் நிறைவேறும் என்று அங்கே சொல்லப்பட்டது. நாம் ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களில் இருக்கிறோம். இப்பொழுது இரகசியம் நமக்கு வெளிப்பட்டிருக்கிறது.

ஸ்தாபனப் போதகர்கள் பிரசங்கம் பண்ணுவார்களா? தானியேலையும் பிரசங்கம் பண்ணுவார்கள்; வெளிப்படுத்தின விசேஷத்தையும் பிரசங்கம் பண்ணுவார்கள்; கொஞ்சம் அரைகுறையாகச் சொல்லுவார்கள். நமக்கு முழுமையாக ஆண்டவர் காண்பிக்கிறார்.

ஏனென்றால் அந்த வார்த்தையின் வெளிப்பாடு ஏழாம் தூதனுக்குத்தான் வரவேண்டும். அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கவேண்டும். (The Word of God always comes to the Prophet) வேதாகமக் கல்லூரியில் படித்த ஸ்தாபன போதகர்களுக்கு வார்த்தையின் வெளிப்பாடு வருவதில்லை. அதனால் அவர்களுக்குச் சரியான விளக்கம் கொடுக்க முடியாது.

கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொடுத்திருக்கிறார். தானியேல் ஒரு தீர்க்கதரிசி, அதேபோல் சகோதரர் பிரன்ஹாம் ஒரு தீர்க்கதரிசி. அவருக்குத்தான் விளக்கம் (Interpretation) கொடுக்கமுடியும். மணவாட்டி மட்டும் தான் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

நான்கு ராஜ்ஜியங்களின் முடிவாக கடைசி வல்லமை வருகிறது. மொத்தம் மூன்று வல்லமை இருக்கிறது. அரசியல் வல்லமை, மதவல்லமை, பிசாசின் வல்லமை இந்த மூன்று வல்லமைகளும் உலகத்தில் இருக்கிறது. இது எல்லாமே சாத்தானின் ஆவிகள். பரிசுத்த ஆவி இதற்கு எதிராக இருக்கிறது. நமக்குத்தான் கர்த்தர் பரிசுத்தாவியின் வல்லமையைக் கொடுத்திருக்கிறார்.

உலகத்தில் சாத்தான் மூன்று விதமான வல்லமையில் இருக்கிறான். மூன்று வல்லமைகளும் கடைசி நேரத்தில் ஒன்றாய் சேர்ந்து அந்திகிறிஸ்துவிலே அது பரிபூரணப்படும்பொழுது உலகத்திலே உபத்திரவ காலம் (Tribulation period) வரும்.

இப்பொழுது அரசியலும், மதமும் ஒன்று சேர்ந்து வருகிறது. அரசியல் வேறு, மதம் வேறு இவை ஒன்றாய் சேரும்போது அது ஆபத்தாக மாறும். அப்பொழுது நாம் இங்கே இருக்கமாட்டோம். பரிசுத்த ஆவியானவர் நம்மை மேலே கொண்டு செல்வார்.

<u>லூக்கா 4: 6,7</u>

6. இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்.

7. நீர் என்னைப் பணிந்துகொண்டால், எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.

சாத்தான், இயேசு கிறிஸ்துவிடம் நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்றான். அதற்கு இயேசு அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே நீ ஆராதனை செய்வாயாக என்று சொன்னார்.

நாம் முத்திரைகளைக் கவனிக்கும் போது, முதலாவது வெள்ளைக் குதிரையைப் (White Horse) பார்க்கிறோம். வெள்ளைக் குதிரையானது மத வல்லமை. (Religious Power).

அதன் பின்பு இரண்டாம் முத்திரை உடைக்கும் பொழுது சிவப்பு நிறமுள்ள ஒருகுதிரை புறப்பட்டது; அதின் மேல் ஏறியிருந்தவன் பூமியில் ஒருவரை ஒருவர் கொலை செய்யத்தக்கதாக சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்தும் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இது என்ன வல்லமை? சிவப்புக் குதிரை அரசியல் வல்லமை உடையவனாகச் சாத்தான் புறப்பட்டுப்போனான்.

அதன் பின்பு மூன்றாம் ஜீவன் நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன், நான் பார்த்தபோது கருப்புநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதில் ஏறியிருந்தவன் தராசைப் பிடித்திருந்தான் ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமை என்றும் ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை என்றும் எண்ணெயையும் திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே என்று நான்கு ஜீவன்களுக்கு மத்தியில் உண்டான ஒரு சத்தத்தையும் கேட்டேன். கருப்புக்குதிரை எதைக் குறிக்கிறது? பிசாசின் வல்லமை.

நான்காவது குதிரை. இந்த மூன்று நிறமும் ஒன்று சேருகிறது. வெள்ளை, சிகப்பு, கருப்பு (White, Red and Black) இந்த மூன்று நிறமும் ஒன்றாக சேர்த்தால் மங்கின நிறம் உடையதாய் இருக்கும்.

<u>வெளி : 6 : 7, 8</u>

7. அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.

8. நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

சாத்தான் நான்காவது குதிரையில் இன்று பிரயாணம் பண்ணுகிறான். எல்லா நிறமும் ஒன்று சேர்ந்து விட்டது. அந்திக்கிறிஸ்துவின் ஆவி. அது ஒரு குதிரை கிடையாது. அது ஒரு வல்லமை, அதன் பின்னால் பிசாசின் ஆவி இருக்கிறது.

தானியேல் அந்த மிருகங்களைப் பார்க்கும் பொழுது முதல் மிருகம் சிங்கமாய் இருந்தது. இரண்டாவது மிருகம் கரடியாய் இருந்தது, மூன்றாம் மிருகம் சிவிங்கியாய் இருந்தது, நான்காவது மிருகம் பயங்கரமான ஒரு மிருகம்.

இதெல்லாம் பார்க்கும்பொழுது சிறுபிள்ளைகளுக்குப் படம் காண்பித்தது போல் அர்த்தமா? அப்படியா பார்த்தான்? இல்லை. அந்த மிருகங்கள் பயங்கரமாய் இருந்தது.

அந்த மிருகங்களுக்குப் பின்னால் ஒரு பிசாசின் ஆவி இருக்கிறது. அது ஒன்றையொன்று மேற்கொள்கிறது. இந்த மிருகம் அந்த மிருகத்தை ஜெயிக்கிறது. அந்த மிருகம் இந்த மிருகத்தை ஜெயிக்கிறது. கடைசியாக மங்கின நிறமுள்ள குதிரை வருகிறது.

யோவான், அவ்விதமான மிருகங்களைக் காணும்போது வெளிப்படுத்தின விசேஷத்தில் இவ்விதமாய் 2000 வருஷத்தில் ஒரே பிசாசுதான் குதிரைகளை மாற்றிக்கொள்கிறான். அதே போல் ஒரே சாத்தானின் ஆவிதான் ஒவ்வொரு மிருகங்களுக்குள் புகுகிறான்.

சிங்கத்துக்குள் இருந்தவன் கரடிக்குள்; கரடிக்குள் இருந்தவன் சிவிங்கிக்குள்; அதன் பின்பு கெடிதும் பயங்கரமான மிருகத்துக்குள் புகுகிறான்.

யோவான் ஆவிகளைப் பார்க்கிறான். அரசியல் வல்லமை, மதவல்லமை, பிசாசின் வல்லமை அதன் பின்னால் இருக்கிறது. சாத்தான் அந்த மூன்று வல்லமைகளை உடையவனாக அந்த மிருகங்களுக்குள் வாசம் பண்ணுகிறான். அந்த மிருகங்கள் என்ன செய்யுமென்றால் ஒன்றையொன்று மேற்கொள்கிறது என்று நாம் பார்த்தோம்.

உபத்திரவ காலம் வருவதற்கு முன்பாக இந்த எல்லா வல்லமையும் ஒன்றாய் சேர்ந்து உலகத்திலே மிகுந்த உபத்திரவ காலத்தைக் கொண்டு வரும். ஆனால் நாம் மேலே போய்விடுவோம். (The final power before tribulation will be a church system with the triple anointing) ஒரு சபை உலகத்தை ஆளுகை செய்யும். கத்தோலிக்க சபை உலகத்தை ஆளுகை செய்யும். அதற்குள் மூன்று வல்லமையும் வந்து ரோம சபையானது உலகத்தை ஆளுகை செய்யும்.

மதவல்லமையும், அரசியல் வல்லமையும், சேரும்போது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அது உபத்திரவ காலமாகும். இரண்டும் தனித்தனியே இருக்க வேண்டும். அதோடு இந்த பிசாசின் வல்லமை சேர்ந்து உலகம் மிகவும் மோசமான நிலைக்குப் போய்விடும். இவ்விதமாய் சேரும்போது அது மிகவும் கோபகரமாக, ஆக்ரோஷமாக மாறிவிடும். இரத்த வெள்ளம் ஓடுகிற அளவுக்கு அது மாறும்.

உலகத்திலே மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் மதப்பிரச்சனை தான். இரத்தம் சிந்துவது மதக்கலவரங்கள். சின்ன சின்ன ஆறுகளெல்லாம் ஒரு பெரிய ஆற்றில் கலந்து மழை அதிகமாக பெய்யும் பொழுது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அதுபோல் பலவிதமான இசம்கள் (பாசிசம், நாசிசம், கம்யூனிசம்) (ISM) பலவிதமான மதங்கள் எல்லாம் சேரும்பொழுது மதக்கலவரங்கள் ஆக்ரோஷமாக மாறும்.

சாத்தான் சிவப்பு குதிரை, வெள்ளைக் குதிரை, கருப்புக் குதிரை மூன்றையும் ஒன்று சேர்க்கும் பொழுது மங்கின நிறமுள்ள குதிரை வருகிறது. இப்பொழுது இந்த மூன்று வல்லமைகளும் இணைய வேண்டிய நேரத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து உலகத்திலே வரும்போது உலகப் பிரகாரமான ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வரவில்லை.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வந்தார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். (God manifested in flesh) வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் மாம்சத்தில் வந்தார். இயேசு என்னும் நாமத்தில் அவர் வரும்பொழுது அவர் எதற்காக வந்தார்? உலகப் பிரகாரமான ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வந்தாரா? இல்லை. அவர் எதற்காக வந்தார். பிலாத்துவிடம் அவர் என்ன சொல்கிறார்.

யோவான் 18: 36

36. இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.

இயேசு கிறிஸ்து என்னுடைய ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல, நான் இவ்வுலகத்துக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வரவில்லை என்றார். இயேசு கிறிஸ்து நம்முடைய இதயத்தில் **தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.** அவர் ஆவிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தார். அல்லேலூயா!

நேபுகாத்நேச்சார், கி.மு. 600-ஆம் வருஷத்தில் ஜீவித்தான். அப்பொழுது அவன் **உலகத்தின் ராஜ்ஜியத்தைக் குறிக்கும்** அந்தச்சிலையைச் சொப்பனம் கண்டான்.

தானியேல் பதினைந்து வயதில் பாபிலோனுக்குப் போயிருக்கிறான் எழுபது வருஷம் நிறைவேறும் வரை அங்கே தான் இருந்திருக்கிறான். அப்போது 85 வயதாய் இருக்கும்.

பெல்ஷாத்சார், கி.மு. 550-ல் ஜீவித்தான். இந்த பெல்ஷாத்சார் காலத்தில் இருக்கும் பொழுது தான் தானியேல் நான்கு மிருகங்களைப் பற்றி தரிசனம் காண்கிறான்.

அதாவது, 50 வருஷத்திற்குப்பிறகு தானியேலுக்கு இந்தத் தரிசனம் வருகிறது. இரண்டும் ஒரே அர்த்தமாய் இருக்கிறது.

தானியேல் 7:1

1. பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின்மேல் தன் தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான். பின்பு அவன் அந்தச் சொப்பனத்தை எழுதி, காரியங்களின் தொகையை விவரித்தான்.

2. தானியேல் சொன்னது: இராத்திரிகாலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது.
3. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.

நேபுகாத்நேச்சாருக்கு அடுத்தபடியாக பெல்ஷாத்சார் முக்கியமான ராஜாவாக இருந்தான். இவனுடைய காலத்திலேயும் தானியேல் பாபிலோனிலே பெரிய அதிகாரியாய் இருந்தான். அப்பொழுது அவனுக்கு இந்தச் சொப்பனம் வந்தது.

அவன் பார்க்கிறான் பெரிய சமுத்திரம் இருக்கிறது. பூமியின் நான்கு காற்றுகளும் சமுத்திரத்தின் மேல் அடிக்கிறது. அப்பொழுது அந்த சமுத்திரத்திலிருந்து நான்கு பெரிய மிருகங்கள் எழும்பின; அந்தக் கடலிலிருந்து தான் நான்கு பெரிய மிருகங்கள் எழும்பின. அந்தக்காற்று கலகத்தையும் யுத்தத்தையும் குறிக்கிறது. (winds of war and conflict). கடல் ஜனங்களையும், ஜாதிகளையும், ஜனக்கூட்டங்களையும் பாஷைக்காரர்களையும் குறிக்கிறது.

வெளிப்படுத்தல் 17: 15

15. பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.

எனவே, சமுத்திரம் என்று சொல்லும்போது அது ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது. சமுத்திரம்போல் ஜனங்கள் வந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு அலைஅலையாக மக்கள் வந்தார்கள் என்றால் திரளான கூட்டமான ஜனங்கள், அநேக பாஷைக்காரர்கள். இந்த ஜனங்கள் மேல் கலகம் ஏற்படும்போது நான்கு வல்லமைகள் அந்த மிருகத்திற்குப் பின்னால் இருக்கிறது. அந்த மிருகங்கள் அங்கு தோன்றுகிறது.

வெளி 7: 1

1. இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.

அந்தக் காற்று எதைக்குறிக்கிறது? முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம், மூன்றாம் உலக யுத்தம், கோகு மாகோகு யுத்தம், என எல்லா யுத்தங்களையும் குறிக்கும்.

சமுத்திரம் எதைக் குறிக்கிறது? சகல ஜாதிகள், ஜனங்கள், பாஷைக்காரர்கள். இன்று உலகத்தில் 700 கோடி மக்கள் இருக்கிறார்கள். இந்தியாவில்120 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஏழில் ஒன்று (1/7) ஜனத்தொகை இந்தியாவில் இருக்கிறது. இந்தியா வரைபடத்தில் (Map) சிறிய நாடுதான். ஆனால் ஜனத்தொகை மிகுந்த நாடு.

2. ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:

3. நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ஒரு தூதன் வருகிறார். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (Lord Jesus Christ). அவர் ஜீவனுள்ள முத்திரை கோலை உடையவராய் வருகிறார். பரிசுத்தாவியின் முத்திரை போடும்படியாக இதோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்றைக்குமே சூரியன் உதிக்கும் திசையிலிருந்து தான் வருகிறார். அவர் நீதியின் சூரியனாக இருக்கிறார்.

**4. முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைப் போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.**

ஒவ்வொரு கோத்திரமும் பன்னிரண்டாயிரம், பன்னிரண்டாயிரம் பாருங்கள் 1,44,000 யூதர்களைக் குறிக்கிறது.

வெளி 7 : 9

**9. இவைகளுக்குப் பின்பு இதோ சகல ஜனங்களிலும், சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டத்தார் வெள்ளையங்கிகளைத்தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு**

**முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகமெங்கிலுமுள்ள சகல ஜாதிகளிலும் முத்திரைப் போடப்பட்டிருக்கிறது.**

அந்தக் காற்றை வீசாதபடி நீங்கள் இழுத்துப்பிடியுங்கள் என்று சொல்லும்பொழுது முதலாம் உலக யுத்தமானது, 11-ஆம் மாதம், 11-ஆம் தேதி, 11- மணிக்கு 1918 -ஆம் வருஷம் திடீரென்று நின்று போனது. அதை நிறுத்த யார் கட்டளை கொடுத்தது? அமெரிக்காவா? இங்கிலாந்தா? ரஷ்யாவா? யுத்தத்தை நிறுத்தும்படி ஒருவரும் அதற்குக் கட்டளை கொடுக்கவில்லை. 11-ஆம் மாதம் 11-ஆம் தேதி 11-ஆம் மணிக்கு இரவில் 1918-ல் அந்த யுத்தம் திடீரென்று நின்று விட்டது. சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வந்த அந்தத் தூதன் அதை நிறுத்தி விட்டார்.

ஏனென்றால் 11-ஆம் மணிவேளை இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வரவேண்டும். இன்றைக்கு பதினொராம் மணி கிறிஸ்தவர்கள் வார்த்தைக்கு வரவேண்டும். அதனால் தான் முதலாம் உலக யுத்தம் அங்கு நின்று விட்டது. 2 கோடியே 80 லட்சம் பேர் முதலாம் உலக யுத்தத்திலே செத்துப் போனார்கள். அது திடீரென்று நின்றுவிட்டது அல்லது அன்றைக்கே உலகம் அழிந்திருக்கும்.

ஏனென்றால், தம்முடைய பிள்ளைகளை ஆண்டவர் முத்திரைபோட வேண்டும். இதோ ஆறாம் முத்திரைக்கும் ஏழாம் முத்திரைக்கும் மத்தியில் முத்திரையிடுதல் நடந்து கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நாம் அந்த நேரத்தில் இருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவியானவரின் முத்திரையைப் பெற்றிருந்தால் மூன்றாம் உலக யுத்தத்திற்குள் போகமாட்டோம். நாம் மேலே போய் விடுவோம்.

**முதலாவது மிருகம் சிங்கம்**

**பாபிலோனிய ராஜ்ஜியம்**




இவ்விதமாக இந்த ஜனங்களிலிருந்து நான்கு ராஜ்ஜியங்கள் எழும்பின. நேபுகாத்நேச்சார் எழும்பினான். முதலாவது மிருகம். நேபுகாத்நேச்சார் அந்த மிருகம் சிங்கமாய் இருந்தது. கழுகின் செட்டை உடையதாய் இருக்கிறது. கழுகுபோல் அது தீவிரமாய் வருகிறது. சிங்கத்தைப்போல் அது கர்ஜிக்கிறதாய் இருக்கிறது. அது மிகவும் செழிப்பான ராஜ்யம், தலையானது பொன்னாக இருக்கிறது.

சாத்தானுக்குச் சில மக்கள் தேவை. அவன் எதற்குள்ளாவது புகுந்து கொள்ள வேண்டும். சர்ப்பத்துக்குள்ளே புகுந்து ஏவாளை வஞ்சித்தான். சாத்தானின் நோக்கம் என்னவென்றால் கொல்ல வேண்டும், அழிக்க வேண்டும்.

திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வாரன். நானோ அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து ஜீவனைக் கொடுக்க வந்தார். சாத்தான் கொல்வதற்கு வருகிறான். இந்த உலகத்தின் ராஜ்ஜியங்களின் நோக்கம் என்னவென்றால் அழித்து நிர்மூலமாக்க வேண்டும். தங்கள் பாதையில் எது குறுக்கே வந்தாலும் அழித்து விடும்.

நேபுகாத்நேச்சார் வந்தான். அசீரிய ராஜ்யம் விழுந்தது; பின்பு யூதாவைக் கைப்பற்றி; எருசலேமைக் கைப்பற்றி; தேவாலயத்தை இடித்துப் போட்டுவிட்டு அதில் இருந்த பொருட்களைப் பாபிலோனுக்குக் கொண்டு போய்; எருசலேமை பாழிடமாக்கி; (70 வருடம் அது பாழிடமாய் கிடந்தது). அதிகமான பேரைக் கொன்று போட்டு; அநேகரைச் சிறைக்கைதிகளாய் பிடித்துக் கொண்டு போய்விட்டான்.

அந்த ராஜ்ஜியத்திற்குப் பின்னால் பிசாசின் வல்லமை இருக்கிறது. அந்த வல்லமை அசீரிய ராஜ்யத்தை வீழ்ச்சியடையச் செய்தது, யூதாவின் ராஜா சிதேக்கியா தோல்வியடைந்தான். அவன் கண்கள் பிடுங்கப்பட்டது. அவன் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டான்.

**தானி 7: 4**

4. *முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது.*

சிங்கம் கழுகின் செட்டைகளை உடையதாக இருக்கிறது. பின்பு அதன் இறக்கைகள் பிடுங்கப்பட்டது. அந்த ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. பாபிலோனிய ராஜ்யம் கி.மு. 626 முதல் 539 ஆம் வருஷம் வரை இருந்தது. பாபிலோன் இன்றைக்கு இருக்கிற ஈராக் நாடு. கடைசியாக பெர்சிய ராஜ்யம் அதை மேற்கொண்டது. கி.மு. 539-ல் பாபிலோனிய ராஜ்யமானது வீழ்ச்சியடைந்தது.

தானியேல் 5-ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்பொழுது பெல்ஷாத்சார் கர்த்தருடைய பாத்திரத்திலே தானும் தன் வைப்பாட்டிகளும் குடித்துக்கொண்டு கல், மண்ணுமான விக்கிரகங்களைப் புகழ்ந்து கொண்டு இருக்கும்பொழுது திடீரென்று கையுறுப்பு வந்து சுவரிலே எழுதினது.

அவன் (பெல்ஷாத்சார்) பயந்து போய்விட்டான். பாட்டு நின்று விட்டது. எல்லோரும் குடிவெறியிலே, போதையிலே இதோ கல்லும் மண்ணுமான விக்கிரகங்களைப் புகழ்ந்து கொண்டிருக்கும் போது கையுறுப்பு வந்து எழுதினவுடனே எல்லாமே நின்று விட்டது; அமைதி ஏற்பட்டு விட்டது.

ராணி அங்கு வந்து என்ன திடீரென்று ஆடல், பாடல் எல்லாம் நின்று விட்டது என்று பார்க்கும் பொழுது இதோ ராஜா கிடுகிடுவென ஆடிக்கொண்டிருக்கிறார். இடுப்பு கட்டுவிட்டு முழங்கால் ஆடுகிறது. எல்லாரும் திகைத்துக் கொண்டிருக்கும்பொழுது ஒருவராகிலும் அர்த்தத்தைச் சொல்ல முடியவில்லை.

அப்பொழுது ராணி சொல்கிறார். உம்முடைய ராஜ்யத்தில் தானியேல் இருக்கிறார். விசேஷித்த ஆவி அவருக்கு இருக்கிறது. உம்முடைய தகப்பனார் நேபுகாத்நேச்சர் காலத்தில் அவர் உறுதியாக்கப்பட்ட தீர்க்கதரிசி. அவரைக் கூப்பிடுங்கள் என்று கூறினார். அப்பொழுது தானியேல் மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின். நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய். தேவன் உன்னுடைய இராஜ்யத்திற்கு மட்டிட்டு அதை மேதியருக்கும் பெர்சியருக்கும் ஒப்புக்கொடுத்தார் என்று கூறினான்.

**தானியேல் 5: 30, 31**

30.*அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான்.*

31. **மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக்கட்டிக்கொண்டான்.**

அன்றைக்கு ராத்திரியிலே பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான். யூப்ரட்டீஸ் நதி அந்தக் கோட்டையைச் சுற்றியிருக்கிறது. மேதியனாகிய தரியு அந்த நதியை ராத்திரியிலே வேறு பக்கமாகத் திருப்பிவிட்டு உள்ளே புகுந்து விட்டான்.

இவர்கள் குடிவெறியில் போதையில் இருக்கிறார்கள்; எல்லாவற்றையுமே மறந்து விட்டார்கள். வெண்கல கதவு பூட்டப்பட்டிருக்கிறது, காவலாளியைக் கொலை செய்துவிட்டான். இதோ அப்படியே பார்த்துக்கொண்டேயிருக்கும் பொழுது அங்கே தரியு உள்ளே புகுந்தான்

தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்துவிட்டு வீட்டிற்குப் போவதற்குள் பெல்ஷாத்சாரின் தலை வெட்டப்பட்டுவிட்டது. ஒரு நாள் ராத்திரியிலே அந்த பாபிலோனிய ராஜ்யம் முடிவுக்கு வந்துவிட்டது. மேதியனாகிய தரியு எந்த யுத்தத்தையும் செய்யாமல் எந்த சண்டையும் போடாமல் ஒரு நாள் ராத்திரியிலே ராஜ்யத்தைப் பிடித்தான்.

பாபிலோனிய ராஜா கர்த்தருடைய பாத்திரத்திலே திராட்ச ரசத்தை ஊற்றி, மது பானத்தையும் ஊற்றிக் குடித்து அவன் வெறியில் இருக்கும்போது அங்கே நியாயத்தீர்ப்பு நடந்தது. எந்த நேரத்திலும் உலகத்தின் ராஜ்யங்கள் வீழ்ச்சியடையலாம். கர்த்தர் எந்த நேரத்திலும் வீழ்ச்சியடைதலைக் கொண்டு வரமுடியும்.

சிலர் டி.வி-யில் மூழ்கியிருப்பார்கள்; சிலர் கம்ப்யூட்டரில் மூழ்கியிருப்பார்கள். சில காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். முன்னால் கேட்டை (Gate) பூட்டியிருக்க மாட்டார்கள். திருடன் வந்திடுவான். அவ்விதமான காலத்தில் நாம் ஜீவிக்கிறோம்.

அதேபோல் தான் இவர்கள் போதையில் இருக்கும்போது தரியு ராஜ்யத்தைக் கைப்பற்றினான். கர்த்தர் அதற்கு முடிவு ஏற்படுத்தினார். அந்த ராஜ்யமானது முடிவடைந்தது.

அதன் பின்பு மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் கி.மு. 539 - 332 வரைக்கும் கிட்டதட்ட 207 வருஷம், உலகத்தை ஆட்சி செய்தது.

இங்கிலாந்து நமது நாட்டை எத்தனை வருஷம் ஆட்சி செய்தது? பிரிட்டிஷ்காரர்கள் 200 வருஷம் ஆட்சி செய்தார்கள். அதனால் தான் உலகமே ஆங்கிலமொழி பேசுவதற்கான காரணம். பிரிட்டிஷ்காரர் உலகத்தை ஆட்சி செய்ததினால் தான் அவர்கள் ஆட்சி செய்யும்பொழுது கிறிஸ்துவ மதம் உலகமெங்கும் பரவிவிட்டது.

## இரண்டாம் மிருகம் கரடி

## மேதிய பெர்சிய ராஜ்ஜியம்




அடுத்து வந்த மிருகம் கரடி, சிலையின் அடுத்த பாகமானது வெள்ளி (Silver)

**தானியேல் 2: 32**

32. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,

இரண்டாவது ராஜ்யம் மேதிய பெர்சிய சாம்ராஜ்யம். கி.மு. 539-ல் டேரியஸ் (Darius) என்பவன் பாபிலோனிய ராஜ்யத்தைக் கைப்பற்றினான். மெசபத்தோமியாவைக் கைப்பற்றினான். எகிப்து, லிபியாவைக் கைப்பற்றினான். பாபிலோனிய ராஜ்யத்தைக் காட்டிலும் மேதிய பெர்சிய ராஜ்யம் பெரிய ராஜ்யமாய் இருந்தது.

மேதியனாகிய தரியு ஆளுகை செய்கிறான். பின்பு பெர்சியர்கள் வந்து மேதியரைக் காட்டிலும் வல்லவர்களாக மாறிவிட்டார்கள்.

பெர்சிய ராஜாவாகிய கோரேஸ் ஜனங்களுக்கு மத சுதந்தரத்தைக் கொடுத்தான். யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குப் போகலாம்; ஆலயத்தைக் கட்டலாம் என்று சொன்னான். பெர்சிய ராஜாக்கள் அலங்கத்தைக் கட்டுவதற்கு நெகேமியாவுக்கு அனுமதி (Permission) கொடுத்தார்கள். இதோ செருபாபேல் தலைமையில் கோரேஸ் ராஜாவின் கட்டளையின்படி அவர்கள் ஆலயத்தைக் கட்டினார்கள். எல்லா ராஜ்யங்களும் இஸ்ரவேல் ஜனங்களோடு சம்பந்தப்பட்டது.

நேபுகாத்நேச்சார் வந்து நியாயத்தீர்ப்பு கொடுத்தான். ஆனால் பெர்சிய ராஜாக்கள் யூத ஜனங்களுக்கு அனுகூலமாய் இருந்து ஆலயத்தையும் அலங்கத்தையும் கட்டவும், தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போகவும் கட்டளை கொடுத்தார்கள்.

**தானியேல் 7: 5**

5. பின்பு, கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்துநின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது; எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது.

அது ஒரு பக்கமாய் சாய்ந்திருக்கிறதென்றால் ஒரு பக்கம் மேதியர். மறுபக்கம் பெர்சியர். மேதிய ராஜ்ஜியம் தாழ்ந்து போனது; பெர்சிய ராஜ்யம் உயர்ந்துவிட்டது.

இரண்டு கை இந்த மனுஷ உடலிலே நான்கு ராஜ்யங்கள் வைத்திருக்கிறார். தலை வந்து பாபிலோன், ஒரு தலைதான், ஆனால் இரண்டு கை இருக்கிறது. மேதிய ராஜ்யம், பெர்சிய ராஜ்யம். தலை முக்கியமானது. இரண்டாவது மார்பு வெள்ளி ஆண்டவர் எல்லாவற்றிலுமே சத்தியத்தை வைத்துத்தான் படைத்திருக்கிறார். சத்தியம் வேதத்தில் மட்டுமல்ல நம் உடலிலும் இருக்கிறது.

யாரும் எனக்குச் சத்தியம் தெரியவில்லை என்று சொல்லமுடியாது. இடது கை தாழ்ந்து போய்விட்டது. வலது கை உயர்ந்து விட்டது. அல்லேலூயா!

மேதியர்கள் தாழ்ந்ததும் பெர்சியர் மேலே வந்துவிட்டார்கள் அது தான் ஒரு பக்கமாய் சாய்ந்திருந்தது. அது மூன்று விலா எலும்புகளைத் தன் வாயில் வைத்திருந்தது. மூன்று பெரிய ராஜ்ஜியங்களை உடையதாய் இருந்தது. ஆனால் இது பாபிலோனைக் கைப்பற்றியது. எகிப்தையும், லிபியாவையும் கைப்பற்றியது.

லிபியாவில் தான் கிறிஸ்தவர்களைக் கடல் பக்கத்திலே கழுத்தை அறுத்து ரத்தத்தைக் கடலில் கலந்தார்கள். ஒசாமா பின்லேடனை நீங்கள் தானே; கிறிஸ்தவர்கள் தானே கொன்றீர்கள். அதனால் நாங்கள் கிறிஸ்தவர்களைக் கழுத்தை அறுத்துக்கொல்கிறோம் என்று கத்தியை வைத்துக் கழுத்தை அறுத்தார்கள்.

கி.மு. 332-க்கு முன்னர் இருந்த அதே ஆவிதான் இப்பொழுதும் லிபியாவில் இருக்கிறது. மனிதர்கள் மரிக்கிறார்கள். ஆவிகள் மரிப்பதில்லை அதே ஆவி இன்றைக்கும் இருக்கிறது. அந்த லிபியாவில் இருந்த மேதிய, பெர்சிய ஆவிகள் தான் இன்றைக்குக் கிறிஸ்தவர்களைக் கொலை செய்கிறதாக இருக்கிறது. மேதிய, பெர்சிய சாம்ராஜ்யம் 207 வருஷமாய் இருந்தது.

**மூன்றாம் மிருகம் சிவிங்கி**

**கிரேக்க**

**ராஜ்ஜியம்**




பின்பு இன்னொரு வல்லமை அதை மேற்கொண்டது. அது தான் கிரேக்க ராஜ்யம் கி.மு. 332 ஆம் வருஷத்திலிருந்து கி.மு. 62-ஆம் வருஷம் வரை கிட்டத்தட்ட 270 வருஷங்கள் கிரேக்க ராஜ்யம் இருந்தது.

கிரேக்க ராஜ்யம் வெண்கலம். அந்தச் சிலையுடைய வயிறு வெண்கலம்.

<u>தானியேல் 2: 32</u>

32.அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,

இதோ வயிறும் அதின் தொடையும் வெண்கலமாய் இருக்கிறது. கிரேக்க ராஜ்ஜியம்; பெரிய ராஜ்ஜியம்; மேதிய பெர்சிய ராஜ்யத்தைக்காட்டிலும் பெரிய ராஜ்ஜியம்; ஆசியாமைனர், கிரீஸ், லிபியா, எகிப்து, யூதா, பாபிலோன், மேதியர், பெர்சியர் இவ்வளவு ராஜ்ஜியங்களை அலெக்சாண்டர் கைப்பற்றினான்.

அலெக்சாண்டர் த கிரேட் யுத்தம் செய்து இந்தியா வரைக்கும் கைப்பற்றினான். மாசிடோனியாவில் ஆரம்பித்து. பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தான்.

அதனால் கிரேக்கமதம், கிரேக்கநாகரிகம், கிரேக்க மொழி உலகமெங்கிலும் பரவியது. அலெக்சாண்டர் முப்பதாவது வயதில் மரித்துப்போனான். அவன் தான் பெரிய ராஜா. கிரேக்க மன்னன். அந்த ராஜ்யத்துக்குள்ளே மதவல்லமை, அரசியல் வல்லமை, பிசாசின் வல்லமைகள் புகுந்து மற்ற ராஜ்ஜியத்தை மேற்கொண்டது. ஒரு கட்சி இன்னொரு கட்சியைத் மேற்கொள்ளும். இரண்டும் சாத்தானின் ஆவிதான்.

மூன்றாம் மிருகத்தைக் குறித்து வாசிக்கும்பொழுது அந்த மிருகத்திற்கு நான்கு தலைகளும், நான்கு இறக்கைகளும் இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தானியேல் 7: 6

6. அதின் பின்பு, சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின்மேல் பட்சியின்செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது.

அது சிவிங்கி போன்ற மிருகம். அதற்கு நான்கு தலைகளும், நான்கு இறக்கைகளும் இருந்தது. அந்த நான்கும் எதைக் குறிக்கும் என்றால், அலெக்சாண்டர் மிகச் சீக்கிரமாய் எல்லா ராஜ்ஜியங்களையும் கைப்பற்றினான். அது அலெக்சாண்டருடைய வேகத்தைக் குறிக்கிறது. (The speed of Alexander’s great conquest)

அலெக்சாண்டர் மரணத்திற்குப் பின்பு 40 வருடம் யார் ராஜாவாக வேண்டும் என்று போராட்டம் ஏற்பட்ட போது நான்கு படைத்தலைவர்கள் அந்த ராஜ்யத்தை நான்காகப் பிரித்துவிட்டார்கள்.

அதற்கு நான்கு தலைகள் இருந்தது. எகிப்து பொட்லோமிக், சிரியா செலுக்கியஸ், மாசிடோனியா கெசண்டர், ஆசியாமைனர் லசிமேக்கர்ஸ் இந்த நான்கு இராணுவ தளபதிகள் ராஜ்ஜியத்தை நான்காகப் பிரித்து விட்டார்கள். அதற்கு நான்கு தலைகள் இருந்தது என்று சொல்லப்பட்டது. கிட்டதட்ட 150 வருஷமாய் யூதர்கள் அந்த கிரேக்க ராஜ்ஜியத்தின் கீழ் அடிமைப்பட்டிருந்தார்கள்.

பாபிலோன் ராஜ்யம் அவர்களை அடிமைப்படுத்தியது; மேதியபெர்சிய ராஜ்யம் அடிமைப்படுத்தியது; கிரேக்க ராஜ்யமும் அடிமைப்படுத்தியது.

**நான்கு குதிரைகள் :** வெள்ளைக் குதிரை, சிவப்புக் குதிரை, கருப்புக்குதிரை அதற்குப் பிறகு மங்கின நிறமுள்ள குதிரை. இன்றைக்கு மணவாட்டியின் மேல் இவ்வல்லமைகள் ஆளுகை செலுத்திக் கொண்டுதான் இருக்கிறது. நாம் ஒரு அரசாங்கத்துக்குக்கீழ்தான் இருக்கிறோம். இயேசுகிறிஸ்து நம்மை நேரடியாக வந்து ஆளுகைச் செய்வார்.

அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களை நான்கு ராஜ்யங்களும் ஆளுகை செலுத்தி தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தது. அவர்களை அடிமைப்படுத்தினது. கிரேக்க ராஜா அதிக தொல்லை கொடுத்தான். 150 வருஷம் அவர்கள் அந்த ராஜ்ஜியத்தின் கீழ் இருந்தார்கள். கி.மு.175-ல் ஆண்டியோகிஸ் IV யெப்பாபினிஸ் (Antiochus-IV- Epiphanes) என்றதான ஒரு பொல்லாத ராஜா தோன்றினான். சிரியா நாட்டிலே ராஜாவாக மாறினான். அவன் நான் தான் கடவுள் (God). கடவுளைக் காண முடியாது. காணக்கூடாத கடவுள் எனக்குள் இருக்கிறார். நான் கடவுளின் அவதாரம் என்றான்.

அவன் யூதர்களை ஆராதனைச் செய்யக்கூடாதபடி தடைப்பண்ணிவிட்டான். யாரும் வேதபுத்தகத்தை வைக்கக்கூடாது என்று கிழித்துப்போட்டுவிட்டான். விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்றான். அவன் தன் நாமத்தைக் கடவுளுடைய நாமமாக மாற்றினான்.

இன்றைக்கு ஒரு கிறிஸ்தவனிடம் நீங்கள் ஆராதிக்கிற கடவுள் யார்? (What is the Name of God). என்று கேட்டால், எவ்வளவு பெரிய பாஸ்டராக இருந்தாலும் உலகத்தையே சுற்றிப்பிரசங்கம் செய்தாலும், அவர் சபைக்கு 20,000 பேர், 30,000 பேர் வந்தாலும் கர்த்தருடைய நாமம் என்ன என்றால் தெரியாது. பலவிதமாகக் குழப்புவார்கள். ஆனால் நாம் கார்த்தராகிய இயேசு கிறிஸ்து என்போம்.

நம்முடைய தேவனின் நாமம் “கர்த்தராகிய இயேசு கிறிஸ்து'' நமக்கு இது வெளிப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அவர்களுக்கு உண்மையான பரிசுத்தாவியின் அபிஷேகம் என்றால் என்னவென்று தெரியாது. அந்நிய பாஷை பேசுவதா? குதிக்கிறதா? அல்லது என்னவென்று தெரியாது. நமக்குக் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய வார்த்தையானது பரிசுத்த ஆவியாய் இருக்கிறது. நீங்கள் அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளும்போது அது பரிசுத்த ஆவியின் அபிஷேகமாய் இருக்கிறது (God’s Words is Spirit when we receive it by faith).

நமக்கு தெளிவு இருக்கிறது. அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டியோகிஸ் IV யெப்பாபினிஸ் ஆவி (குழப்பத்தின் ஆவி) அவர்களுக்குள் இருக்கிறது. அவன் நான் தான் கடவுள். விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்று சொன்னான்.

பாழாக்கும் அருவருப்பை ஸ்தாபித்ததே அவன்தான். தேவனுடைய ஆலயத்தை; செருபாபேல் கட்டின ஆலயத்தை; அவன் தீட்டுப் படுத்தினான். கி.மு. 167 -வது வருஷம் அவன் பன்றியைத் தேவனுடைய பலிபீடத்தில் பலி செலுத்திவிட்டு அதைத் தீட்டுப்படுத்திப் போட்டான் (Antiochus desecrated the Jewish Temple sacrificing a pig on the altar). அதனால் ஜூடாஸ் மெக்கபிஸ் (Judas Maccabeus), மெக்கபிஸ் இயக்கம் ஏற்பட்டது. அவர்கள் போராடினார்கள, எதிர்ப்பு தெரிவித்தார்கள். கி.மு. 164-ல் பலிபீடத்தை மறுபடியும் சுத்திகரித்து பிரதிஷ்டை செய்தார்கள். இப்படி கிரேக்க ராஜ்யம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அதிக தொல்லை கொடுத்தது.

அந்தச் சிலையைப் பார்க்கும்பொழுது, வயிறும் தொடையும் வெண்கலமாக இருக்கிறது. கடைசியாக அந்த ராஜ்யமும் தோல்வியடைந்தது. ஆண்டவர் எல்லாவற்றுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் கொடுக்கிறார். அனுமதிக்கும் சித்தம் கொடுக்கிறார். அந்த அனுமதிக்கும் சித்தம் கொடுத்து; அந்த வருஷம் முடியும் பொழுது அதன் பிறகு அவர்கள் ஜெயிக்கவே முடியாது.

**நான்காம் மிருகம்**
**பயங்கரமான மிருகம்**
**ரோம ராஜ்ஜியம்**




இப்பொழுது வேறொரு மிருகம் அங்கு தோன்றுகிறது. அலெக்சாண்டர் மரித்தார் நான்கு ராஜ்யங்களாக அது பிரிக்கப்பட்டது. அதன் பின்பு “ரோம்'' வந்து அதெல்லாவற்றையுமே ஜெயித்தது.

“ரோம ராஜ்ஜியம் கி.மு. 63-ஆம் வருஷம் தோன்றி கி.பி. 476 -ஆம் வருஷம் முடிவடைந்தது. ரோமர்கள், ரோமாபுரியைத் தலைநகராக வைத்து உலகத்தை ஆளுகை செய்தார்கள்.

தானியேல 2: 33

33. அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.

தானியேல் 7: 7

7. அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.

பயங்கரமான மிருகம்; ரோம ராஜ்யம். கிரீஸ் நாட்டை ஜெயித்துவிட்டது. எல்லா ராஜ்யத்தின் பின்னாலேயும் மூன்று வல்லமையும் இருக்கிறது.

நான்காம் ராஜ்யம் (Fourth Kingdom) “கான்ஸ்டான்டைன்” தோன்றினான். மார்ச் மாதம் 15 ஆம் தேதி கி.மு. 44-ல் ஜுலியஸ் சீசர் கொல்லப்பட்டார்; கி.மு. 37-ஆம் வருஷத்துக்கு முன்பாக ஆக்டேவியன், மார்க் ஆண்டனி என்றதான ரோம அரசர்கள் வந்து ஏரோதை யூதா, இஸ்ரவேலின் மேலே ராஜாவாக மாற்றினார்கள். கி.மு. 27-ஆம் வருஷத்துக்கு முன்பாக ஆக்டேவியன் ரோம சக்கரவர்த்தியாக மாறினார். தமிழ் பைபிளில் அகுஸ்துராயன் என்று போடப்பட்டுள்ளது.

லூக்கா 2: 3

**3. அந்நாட்களிலே உலகமெங்கிலும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அஸ்துராயனால் கட்டளை பிறந்தது.**

குடிமதிப்பு எழுத வேண்டுமென்று சொல்லும் பொழுது யோசேப்பும் மரியாளும் பெத்தலகேமுக்கு வந்தார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து பிறந்தார். இயேசுகிறிஸ்து பிறக்கும்பொழுது ரோம ராஜ்ஜியம் இருக்கிறது. ரோம ராஜ்யம்தான் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தது. ரோம ராஜ்யம் கடைசி வரைக்கும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் அது இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**வெளிப்படுத்தல் 1: 7**

*7. இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும் ஆமென்.*

அவரைக் குத்தினவர்கள் யார்? ரோமர்கள் அவரது கையிலும், காலிலும் ஆணி அடித்தார்கள். சிலுவையிலே வைத்து ஆணி அடித்தார்கள். அவர்களும் இயேசுகிறிஸ்துவை இரண்டாம் வருகையின்போது காண்பார்கள்.

அந்த ராஜ்யம் கி.பி. 476-ல் முடிவடைந்தாலும் வேறு வடிவத்தில் உலகத்தின் முடிவுவரைக்கும் அந்த ராஜ்யம் தொடரும் அன்றைக்கு அஞ்ஞான ரோமாபுரி கிறிஸ்தவர்களைக் கொன்றது. அப்போஸ்தலர்களைக் கொன்றது. அதே ஆவிதான் போப்பின் ரோமாபுரிக்குள் வந்து பிராட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்களைக் கொலை செய்தது. எல்லா ஆவிகளின் ஒரே நோக்கம் என்னவென்றால் கொல்வதும், அழிப்பதும் தான். ஆனால் இயேசு கிறிஸ்து ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார். அல்லேலூயா!

இயேசுகிறிஸ்து மீண்டும் வரும்பொழுது அந்த ஆவிகள் அஞ்ஞான ரோமாபுரியாய் இல்லாதபடி போப்புவின் ரோமாபுரியாக அந்திகிறிஸ்துவாக இருக்கும். ஆமென்.

இயேசு கிறிஸ்து ரோமராஜ்யம் தன்னைச் சிலுவையில் அறைவதற்குத் தன் கைகளையும் தன் கால்களையும் ஒப்புக்கொடுத்தார். ரோமப் போர்ச் சேவகர்கள் இரண்டு கால்களையும் சேர்த்து வைத்து ஒரு ஆணியை அடித்தார்கள். இதோ வலது கையிலும் இடது கையிலும் ஆணியை அடித்தார்கள். இயேசுகிறிஸ்துவை மிகப்பரிதாபமாக சிலுவையில் ரோமர்கள் அறைந்திருக்கிறார்கள். அன்றைக்கு அவரை மேற்கொண்டார்கள்; சிலுவையில் அறைந்தார்கள். நமக்காக அவர் பாவத்துக்காக மரிக்க வேண்டும்.

இப்பொழுது அந்த ராஜ்ஜியத்தைத் தோற்கடிக்கும்படியாக வருகிறார். அந்த ரோம ராஜ்யம், நான்காவது ராஜ்யத்தைத் தோற்கடிக்கும் படியாக வருகிறார். அன்றைக்கு ஒரு சாதாரண மனுஷனாய் வந்தார். எளிமையான ரூபத்தில் வந்தார். ஆனால் இப்பொழுது வெள்ளை குதிரையில் வருகிறார். அல்லேலூயா!

**வெளிப்படுத்தல் 19 : 11-16**

*11. பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவ ரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.*

*12. அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.*

*13.இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.*

*14.பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள்.*

*15. புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*

16. *ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.*

வெள்ளைக் குதிரையிலே வந்து ரோமராஜ்யம் முற்றிலும் அழித்துப் போடுவார். வெள்ளைக்குதிரை ஏறி நாமும் அவரோடு கூட வந்து ரோமராஜ்யத்தை அழிக்கும்பொழுது அந்த வெற்றியில் நமக்கும் பங்கு உண்டு. அல்லேலூயா! ரோம அரசாங்கம் அவரைச் சிலுவையில் அறைந்தது. ரோம அரசாங்கத்தை அவர் ஜெயிக்கப் போகிறார் உலகத்தின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்பொழுது நாமும் அவரோடு கூட வெள்ளைக் குதிரையிலே ஜெயத்தைப் பெறுகிறோம்.

இப்பொழுது நாம் நான்காம் ராஜ்யத்தில் இருக்கிறோம். அந்த அஞ்ஞான ரோமாபுரி ஒழிந்து போனது. அது இன்றைக்கு கத்தோலிக்க மார்க்கமாக மாறியிருக்கிறது. 124 கோடி மக்கள் கத்தோலிக்க மார்க்கத்தில் இருக்கிறார்கள். உலகத்திலே அந்த போப் தான் எல்லாவற்றிலும் பெரியவராய் இருக்கிறார்.

அதைக் குறித்து வேதத்தில் என்ன எழுதியிருக்கிறது.

<u>வெளிப்படுத்தல் 13 : 1</u>

**1. பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன். அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன. அதின் கொம்புகளின் மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.**

**2. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போல் இருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும் அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன. வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.**

**3. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி.**

**4. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும் மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன். யார் என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள்.**

இதோ நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக்கண்டேன். அந்த மிருகத்துக்கு ஒப்பானவன் யார்? மிருகத்தோடு எதிர்த்து நிற்பவன் யார் என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள். கத்தோலிக்க மார்க்கத்தில். போப்பையும் வழிபடுகிறார்கள்.

வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் தன் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. அது சமுத்திரத்திலிருந்து திரளான மக்கள் மத்தியில் இறங்கி வருகிறது. அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தது. அதன் தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாக காயப்பட்டது. ஆனாலும் அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. அஞ்ஞான ரோமாபுரி கி.பி. 476-ல் அழிந்து போனது. அது போப்பின் மார்க்கமாக மாறிவிட்டது.

தலைகளில் ஒன்று சாவுக்கேதுவான காயப்பட்டது. நெப்போலியன் போனப்பார்ட் போப்புக்கு ஒரு முடிவை ஏற்படுத்தினான். இராஜாக்கள் மேல் அதிகாரம் செலுத்தியவரை ஜெயிலில் போட்டுவிட்டான். ஆனாலும் அந்த மார்க்கம் அழிந்து போகவில்லை.

அது சாவுக்கேதுவான காயம் பட்டது. ஆனாலும் அது பலத்த மிருகமாகத்தான் இருக்கிறது. சமுத்திரத்திலிருந்து இறங்கி வந்தது திரளான ஜனங்கள் ஜாதிகள் இருக்கிறார்கள். அக்டோபர் மாதம் 28-ம் தேதி 312-ம் வருஷம் கான்ஸ்டான்டைன் என்ற ரோம சக்கரவர்த்தி யுத்தத்திற்குப் போகும்பொழுது அவன் சிலுவை சின்னத்தைப் பார்க்கிறான். இந்த சின்னத்தினாலே உனக்கு ஜெயம் கிடைக்கும் என்னும் சத்தம் அவனுக்குக் கேட்டது. உடனே ராத்திரியோடு ராத்திரியாக போர்ச் சேவகர்கள் ஈட்டியிலே சிலுவைப் படத்தைப் போட்டான். அவர்களின் சின்னம் கழுகு. அதை எடுத்து விட்டு சிலுவையைப் போட்டு யுத்தத்திற்குப் போகும்பொழுது ஜெயத்தைப் பெற்றான். அதிலிருந்து கிறிஸ்துவ மார்க்கமாக மாற்றிவிட்டான்.

கி.பி. 600-ஆம் வருஷத்திலே போப்பை ஒரே தலைவராக ஏற்படுத்தினான். அவனுக்கு விரோதமாக இருந்த 6 கோடியே 80 லட்சம் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். எல்லா வல்லமைகளும் சிலுவைக்குப் பின்னால் வந்து ஒளிந்திருக்கிறது. சாத்தான் மிகவும் தந்திரமாய் இருக்கிறான். (It is very interesting to see how the Political, Religious and Demonic power get behind the cross).

**இரண்டு கால்கள் இரும்பு;** இரும்பு எல்லாவற்றையுமே நொறுக்கிவிடும். உடைக்க வேண்டு மென்றால் இரும்புச் சுத்தியலை வைத்து அடித்தால் எல்லாம் உடைந்துபோகும். அது போல் எல்லா ராஜ்யங்களையும் அது நொறுக்கிப் போட்டு விட்டது. இரண்டு கால்கள் கிழக்கு ரோமாபுரி, மேற்கு ரோமாபுரியாக இரண்டாகப் பிரிந்தது. பின்பு உடைந்து, உடைந்து கி.பி. 476-ல் ரோம ராஜ்யம் இல்லாமல் போய்விட்டது. இதோ போப்புவின் ரோமாபுரி அங்கு வந்து விட்டது.

இப்பொழுது நாம் பாதத்தின் நாட்களுக்கு வந்திருக்கின்றோம். கடைசியாக அந்தப் பாதத்தைக் குறித்துப் பார்ப்போம்.

தானியேல் 2: 41

41. *பாதங்களும் கால்விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்ட படியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும்.*

ரோம ராஜ்யம் விழுந்த உடனே போப்புவின் ரோமாபுரி வந்தது. தியத்தீரா சபையின் காலம் கி.பி. 606 முதல் 1520 வரைக்கும் உலகத்திலே இருந்த ஒரே மார்க்கம் ரோமன் கத்தோலிக்க மார்க்கம். இருண்ட காலமாக இருந்தது. 6 கோடியே 80 லட்சம் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதனுடைய ஒரே நோக்கம் கொலை செய்வது, அழிப்பது, தன்னுடைய கருத்துகளை ஏற்றுக்கொள்ளாதவர்களைக் கொலை செய்வது, எல்லா பிசாசினுடைய ஆவிகளுக்கும் அதே நோக்கம்தான். ரோம ராஜ்யம்; நாலாவது மிருகம் வேறு வடிவில் மாறிவிட்டது. அது கர்த்தருடைய வருகை வரைக்கும், உலகத்தின் முடிவு வரைக்கும் இருக்கும்.

இப்பொழுது பாதத்தின் நாட்களில் வந்திருக்கிறோம். நாம் அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மத ரீதியாகப் பார்த்தால் உலகில் இரண்டு வல்லரசுகள்; அமெரிக்கா மற்றும் ரஷ்யா. அமெரிக்கா இரும்பாக இருக்கிறது. ரஷ்யா களிமண்ணாக இருக்கிறது. இரண்டுக்கும் சமாதானம் ஏற்படாது.

அமெரிக்காவில் ஐசன்ஹோவர் (Eisenhower) என்பவர் ஜனாதிபதியாக மாறினார். (Eisenhower, General and president of U.S.A.) 1945 –ஆம் வருஷம் ராணுவ தளபதியாய் இருந்தார். பின்பு அவர் 1951-ஆம் வருடம் அவர் தேசிய அணுசக்தி ஒப்பந்தக் குழுவிற்கு

(NATO : North Atlantic Treaty Organisation) தலைவராக மாறி அதன்பின், ஜனாதிபதியாக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால் ஐசன்ஹோவர் ஐக்கிய நாட்டுச் சபையை ஆரம்பிக்கக் காரணமாக இருந்தார்.

1959 -ல் ஐக்கிய நாட்டு சபைக்குச் (United Nations Organisation) குருச்சேவ் (Khrushchev) கிழக்கத்திய நாடுகளுக்குப் பிரதிநிதி (Representative) ஆகவும், மேற்கத்திய நாடுகளுக்குப் பிரதிநிதியாக அமெரிக்காவின் ஐசன்ஹோவர் வரும்பொழுது, ரஷ்ய ஜனாதிபதி (Premier) தன் காலில் இருந்த ஷு-வைக் (shoe) கழற்றி டெஸ்கில் (Desk) அடித்தார்; உங்களை நாங்கள் கொன்றிடுவோம்; என்று அமெரிக்காவைப் பார்த்து சொல்லுகிறார். கடைசியிலே ரஷ்யா அமெரிக்காவை அழிக்கப் போகிறது.

இரண்டு பாதங்கள் : ஒன்று அமெரிக்கா, இன்னொன்று ரஷ்யா. அமெரிக்கா இப்பொழுது தன் வல்லமை இழந்து கொண்டு வருகிறது. தேவனை அவர்கள் விட்டு விட்டார்கள் தீர்க்கதரிசியின் செய்தியை நிராகரிக்கும் பொழுது 1956 - 57 -ல் இனிமேல் அமெரிக்கா மனந்திரும்பாது என்று சகோ. பிரன்ஹாம் சொல்லிவிட்டார். அமெரிக்காவுக்குக் காலம் முடிந்து விட்டது. அமெரிக்கா அப்பொழுதிலிருந்தே பலவீனம் அடைந்து விட்டது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் வல்லரசுகள் தான். அணு ஆயுதங்கள் இந்த இரண்டு நாடுகளிலும் தான் அதிகம் இருக்கிறது. சகோதரர். பிரன்ஹாம் இது அழிவு காலத்திற்கு அடையாளம் என்கிறார்.

அதே போல் மத வல்லமையை எடுத்துக்கொண்டால் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் வல்லமையாக இருக்கிறது. 124 கோடி மக்களுக்கு ஒரே தலைவர் போப் தான். ஆனால் பிராட்டஸ்டென்ட் மார்க்கத்தில் பல பிரிவுகள் இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க மார்க்கமும் பிராட்டஸ்டெண்டும் இரும்பும் களிமண்ணும் இருக்கிறது. ஒன்று பலமாக இருக்கிறது இன்னொன்று பலவீனமாக இருக்கிறது.

இவ்விதமான காலத்தில் நாம் ஜீவிக்கும்போது; நான்கு ராஜ்யங்களும் விழ வேண்டிய நேரத்தில் இருக்கும்பொழுது; தேவனுடைய ராஜ்யம் வருமென்று காத்திருக்கிறோம். எத்தனை பேர் காத்திருக்கிறோம்.

நாம் இப்பொழுது கடைசி நேரத்தில் வந்திருக்கிறோம். பொன் பாபிலோன். கிமு.605 முதல் 539 வரைக்கும், வெள்ளி மேதியர் பெர்சியர் கிமு. 539 முதல் 332 வரைக்கும், வெண்கலம் கிரேக்க ராஜ்யம் கிமு.332 முதல் 63 வரைக்கும் இரும்பு கிமு. 63 -யிலிருந்து கிபி.476 வரை அதன் பின்பு கி.பி. 600 லிருந்து போப்பின் ராஜ்யமாகத் தொடருகிறது. இப்பொழுது நான்காவது ராஜ்ஜியம்; இரும்பும், களிமண்ணுமான காலத்தில் இருக்கும் பொழுது ஒரு பங்கு உரமாகவும் ஒரு பங்கு பலவீனமாகவும் இருக்கிறது. ஒருவரோடு ஒருவர் சம்பந்தம் கலப்பார்கள். ஆனாலும் ஐக்கியம் ஏற்படாது.

இவ்விதமான காலத்தில் நாம் என்ன நினைக்க வேண்டியதாய் இருக்கிறதென்றால்; அவர்கள் ரோமன் கத்தோலிக்கர்கள் தங்களுடைய மதக் கொள்கைகளை உலகமெங்கும் கொண்டு சென்று விட்டார்கள். ஹாஸ்பிட்டல், காலேஜ் எல்லாவற்றையுமே ஏற்படுத்தி உலகமெங்கிலும் மதத்தைக் கொண்டு வந்து கல்வியின் (Education) மூலமாக தங்களுடைய மதத்தைப் பரப்பி (Pagan Rome become R.C. Church) கடைசியிலே, அது உபத்திரவ காலத்திலே எல்லாரையும் கொலை செய்யும் மகா உபத்திரவக் காலத்தை ஏற்படுத்தும் பொழுது நாம் இங்கே இருக்க மாட்டோம். கர்த்தர் நம்மை மேலே எடுத்துக்கொண்டு செல்வார் அல்லேலூயா! பரிசுத்த ஆவியானவர் சிங்கம், காளை, மனுஷமுகம் இன்று கழுகின் காலத்தில் இருக்கிறார் அல்லேலூயா!

நாம் மேலே போய்விடுவோம், எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். ஆமென் பிசாசின் வல்லமைகள் எல்லாம் ஒன்று சேரும் பொழுது அந்தி கிறிஸ்து அங்கே ஏற்படுகிறது. இன்று பரிசுத்த ஆவியின் முத்திரைகள் திறக்கப்பட்டு 2000 வருஷம் ஸ்தாபன கோட்பாட்டினாலே கட்டப்பட்டிருந்த பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது மணவாட்டியின் மேல் பரிசுத்த ஆவியின் வல்லமை முழுமையாக வந்திருக்கிறது. அல்லேலூயா!

இதோ உலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் உங்களுக்குள் இருப்பவர் பெரியவர். அவர் மணவாட்டிக்குள் வந்து வாசம் பண்ணுகிறார். (The Destroying Power is now residing in the Bride). கடைசியாக கையால் பெயர்க்கப்படாத கல் வரும்பொழுது அது எல்லா ராஜ்ஜியங்களையும் அழித்துப்போடும். அந்தக்கல் இப்பொழுது எங்கு இருக்கிறது? உங்களுக்குள் இருக்கிறது. அல்லேலூயா! அந்தக்கல் தேவனுடைய ராஜ்யம் (It's the Kingdom of God).

**லூக்கா 17: 21**

**இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் சொல்லப்படுவதற்கு ஏதுவிராது. இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.**

இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது. (Behold the Kingdom of God is within you). இந்தக்கல் கிறிஸ்து (That Stone is Christ) நமக்குள் இருக்கும்பொழுது இந்தக்கல் தான் எல்லாவற்றையும் நொறுக்கிப் போடும்.

எல்லா ராஜ்யங்களையும் நிர்மூலமாக்கும் வல்லமையுள்ள ராஜ்யம். நமக்குள் இருக்கும் பொழுது நமக்கு முன்பாக யார் எதிர்த்து நிற்க முடியும் ஆமென். (Who can stand before you? If the Kingdom of God is in you). தேவனுடைய ராஜ்யம் உலகத்திலுள்ள எல்லா ராஜ்யங்களையும் அழித்துப்போடும். அந்த ராஜ்யம் இன்றைக்கு நம்முடைய இருதயத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்? அல்லேலூயா. (No power in Heaven and Earth can stand before the Kingdom of God) உலகத்திலுள்ள அரசியல், மத, பிசாசின் வல்லமைகள் தேவனுடைய இராஜ்யத்துக்கு விரோதமாக நிற்க முடியாது. எத்தனை பேர் விசுவாசிக்கிறோம்.

எல்லா வல்லமைகளும் ஒன்றாக சேர்ந்து மங்கின நிற குதிரையாக மாறும்பொழுது இன்றைக்கு முத்திரைகள் திறக்கப்பட்டு எல்லா பரிசுத்த ஆவியும் நமக்குள் வரும்பொழுது நம்மை எதிர்க்க முடியாது ஆமென்.

உலகத்திலே இருப்பவனைக் காட்டிலும் உங்களுக்குள் இருப்பவர் பெரியவர். நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தின் வல்லமையைப் பெற்றிருக்கும் போது நம்மை யாரும் மேற்கொள்ள முடியாது. (We got the power in the Name of the Lord. We cannot be defeated. Hallelujah!)

இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர் மேசியாவின் அடையாளத்தைக் கொடுத்தார். இன்றைக்கு ஆண்டவர் ஒரு தீர்க்கதரிசி மூலமாக மேசியாவின் அடையாளம் (The sign of messiah) கொடுத்திருக்கிறார். மேசியா வரப்போகிறார். ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார். அல்லேலூயா! அவருடைய ராஜ்யம் என்றென்றைக்கும் உள்ள ராஜ்யம்; அந்த ராஜ்யம் நமக்குள் இருக்கும்பொழுது எப்படி உலகத்தின் ராஜ்யம் நம்மை மேற்கொள்ளும்.

***We got the power in the name of Lord Jesus Hallelujah we cannot be defeated.***

**ஆமென்!**